# அக்டோபர் – 09 – செவ்வாய்

புனித ஜோன் லியோனார்ட்

## ஆண்டவரே! நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர்! திபா. 139:1

## முதல் வாசகம் கலாத்தியர் 1 : 13 – 24

சகோதர சகோதரிகளே! நான் யூதநெறியைப் பின்பற்றி வந்த காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டேன் என்பதுபற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கடவுளின் திருச்சபையை மிகக் கொடுமையாகத் துன்புறுத்தி ஒழிக்க முயன்றேன்.மூதாதையர் மரபுகளில் ஆர்வம் மிக்கவனாய் என் இனத்தவருள் என் வயதினர் பலரைவிட யூதநெறியில் சிறந்து விளங்கினேன்.ஆனால் தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தமக்கென ஒதுக்கிவைத்துத் தமது அருளால் என்னை அழைத்த கடவுள்,தம் மகனைப் பற்றிய நற்செய்தியைப் பிற இனத்தவர்க்கு நான் அறிவிக்குமாறு அவரை எனக்கு வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டார். அப்போது நான் எந்த மனிதரிடமும் போய்க் கலந்து பேசவில்லை.எனக்குமுன் திருத்தூதர்களாய் இருந்தவர்களைக் காண எருசலேமுக்குப் போகவுமில்லை. ஆனால் உடனே அரேபியாவுக்குச் சென்றேன். அங்கிருந்து தமஸ்கு நகருக்குத் திரும்பினேன்.மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுநான் கேபாவைப் பார்த்துப் பேச எருசலேமுக்குப் போனேன். அங்கே பதினைந்து நாள் அவரோடு தங்கியிருந்தேன்.ஆண்டவரின் சகோதரரான யாக்கோபைத்தவிர திருத்தூதருள் வேறு எவரையும் நான் போய்ப் பார்க்கவில்லை.நான் உங்களுக்கு எழுதுவதில் பொய் ஒன்றுமில்லை. இதற்குக் கடவுளே சாட்சி!பிறகு நான் சிரியா, சிலிசியப்பகுதிகளுக்குச் சென்றேன்.ஆயினும் யூதேய நாட்டிலிருந்த கிறிஸ்தவச் சபைகளுக்கு அதுவரை அறிமுகம் ஆகாமலேயே இருந்தேன். ”ஒருகாலத்தில் தங்களைத் துன்புறுத்தியவன், தான் முன்பு ஒழிக்க முயன்ற விசுவாசத்தை இப்பொழுது நற்செய்தியாக அறிவிக்கிறான்” என்றுமட்டும் அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். அதற்காக என்பொருட்டுக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

**பதில்பாடல் :** என்றும் உள்ள வழியில் என்னை நடத்தியருளும் அண்டவரே.

## நற்செய்தி : லூக்கா 10 : 38 - 42

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுடன் ஓர் ஊருக்குச்சென்றார்.அங்கே பெண் ஒருவர் அவரைத் தம்வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா.அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து,”ஆண்டவரே, நான் பணிவிடைசெய்ய என்சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிபுரிய அவளிடம் சொல்லும்” என்றார்.ஆண்டவர் அவரைப் பார்த்து, ”மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப்பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள் அது அவளிடமிருந்து எடுக்கப்படாது” என்றார்.

**தியானம்:** இயேசுவின் நண்பர்களான மரியாவும், மாத்தாவும் பேறுபெற்றவர்கள் இயேசு எப்போதெல்லாம் ஓய்வெடுக்கவிரும்புகிறாரோ, அப்போதெல்லாம் அவரைத் தம் வீட்டில் வரவேற்க பேறு பெற்றிருந்தனர். இன்றையவாசகத்தில் மார்த்தாவின் மனநிலையை கொஞ்சம் சிந்திப்போம். மார்த்தாவுக்கு நல்ல எண்ணம் இருந்தது. இயேசுவை நன்கு உபசரிக்க வேண்டும், அவருக்கு நன்கு பணிவிடை செய்ய வேண்டும். இந்த எண்ணம் பாராட்டுதற்குரியது. ஆனால் அடுத்து அவர் செய்தது தான் இயேசுவின் கவனத்தை ஈர்த்தது. மார்த்தா இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த மரியாவைப்பற்றி உரிமையுடன் புகார் சொல்கிறார். என்னை தனியே விட்டுவிட்டாள் என்ற குற்றச்சாட்டுடன் எனக்கு உதவிபுரியும்படி சொல்லும் என்ற விண்ணப்பத்தையும் இயேசுவிடம் வைக்கிறார். மார்த்தாவிடம் காணப்பட்ட பண்பு, அடுத்தவரிடத்தில் குறை காணக்கூடிய பண்பு. மார்த்தா பரபரப்பாக வேலை செய்து கொண்டிருந்தாலும் தன்கடமையை மட்டும் செய்து கொண்டிராமல் மரியா மீதும் ஒரு கண் வைத்திருக்கின்றார். அடுத்தவரைப்பற்றி தேவையில்லாமல் குறைசொல்வதும் தவிர்க்கக்கூடிய ஒன்றாக இருக்கவேண்டும் என்பதையே இயேசுவின் வார்த்தைகள் நமக்கு காட்டுகின்றது. அடுத்தவரை குறைகூறுவதை தவிர்த்து நமது பணியைச் செய்வதில் நாம் நிறைவுகாணவேண்டும்.